<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி. 16/2018</u>

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியண்ணன் | வயது | 30 |
| த.பெ.(அ)க.பெ. | மணி | தொழில் | மேஸ்திரி |
| ஊர்/பணிபுரியுமிடம் | ஆண்டியப்பனூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் ஆண்டியப்பனூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு தேதி மாதம் நினைவில்லை. எங்கள் ஊரான ஐயங்கொல்லைக்கு போலீஸார் வந்தார்கள். எங்கள் ஊரில் நடந்த சண்டை சம்மந்தமாக விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிகக்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் என்னிடத்தில் மற்றொரு கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று தெரியவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோாியதன் போில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

மேற்படி ஆவணம் தயார் செய்த பின்பு அந்த இடத்திலிருந்து இரண்டு விறகு கட்டைதுண்டுகள் மற்றும் சிறிய செங்கல் ஆகியவற்றை கைப்பற்றியதற்கு சாட்சியாக போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வரைபடம் வரைந்ததற்கு சாட்சியாக கையெழுத்து போட்டது தான் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியது குறித்து தனக்கு ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

பாப்பாண்ணன் எனக்கு மாமா உறவுமுறை. சம்பவத்தை பற்றி நேரடையாக தெரியாது என்றால் சரிதான். நான் அந்த சமயம் வெளியூரில் மேஸ்திரி வேலைக்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். நான் 10 நாட்கள் கழித்து ஊருக்கு வந்திருப்பேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. பாப்பாண்ணன் எனக்கு மாமா என்பதால் அவருக்கு ஆதராவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடம் தெரியாது என்றால் சரிதான். என் முன்பாக போலீஸார் எந்த படமும்வரையவில்லை என்றால் சரிதான். வெளியில் சென்றபோது என் பெயர் ஊர் , விலாசம் கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு நேராக என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான்.போலீஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை.